பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 09 வியாழக்கிழமை 22.04.2021 கதிர் 36

## துணைவேந்தர் ஆஸ்பத்திரியில்



**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம், ஏப்.22

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜா மாரடைப்புக் காரணமாக யாழ்ப்பாணம்

☞2

# மீண்டும் கொரோனா; சுற்றுலா செல்லாதீர்!



## பொதுமக்களிடம் இராணுவத் தளபதி கோரிக்கை

இலங்கையில் மீண்டும் கொரோனா வைரஸின் அபாயம் ஏற்பட்டுள்ளது. இரண்டு மாதங்களுக்குப் பின்னர் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது. எனவே, அடுத்த ஒரு மாதத்துக்குச் சுற்றுலா செல்வதைப் பொதுமக்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

- இவ்வாறு கொரோனா வைரஸ் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் பிரதானி இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

☞2

# அரசின் மிரட்டலுக்கு நான் அடிபணியேன்!



## விஜேதாஸ எம்.பி. சூளுரை

எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தோ அல்லது நான் உள்ளிட்ட எனது குடும்பத்தினரைக் கைது செய்து சிறையில் அடைத்தோ அரசு மிரட்டினால் அதற்கெல்லாம் அடிபணியமாட்டேன். ஜனாதிபதியின் பொய் முகத்தை அம்பலப்படுத்தியே தீருவேன்.

- இவ்வாறு கடும் சீற்றத்துடன் தெரிவித்தார்

☞2

# பல்கலைக்கழகங்கள் திறக்கப்படமாட்டா!

## கல்வி அமைச்சர் அறிவிப்பு



கொழும்பு, ஏப். 22

எதிர்வரும் 27ஆம் திகதி பல்கலைக் கழகங்கள் மீளத் திறக்கப் படமாட்டாது என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இன்று காலை நாடாளுமன்றத்தில் வைத்து அவர் இதனைக் கூறினார்.

☞2

# தமிழீழத்தை எதிர்த்தவர்கள் இப்போது சீன ஈழத்தைத் தோற்றுவிக்க முயற்சி!

## சஜித் அணி குற்றச்சாட்டு



தமிழீழத்தை எதிர்த்தவர்கள் இப்போது சீன ஈழத்தைத் தோற்றுவிப்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கின்றனர்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அத்துடன், இவ்வாறான செயற்பாடுகளால் நாட்டின் இறையாண்மை மற்றும் தனித்துவமே பாதிக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

☞2

# பாடசாலைகளை மூடும் முடிவு இன்னும் இல்லை!



நாட்டில் தற்போது நிலவும் கொரோனா வைரஸ் தொற்று பரவல் நிலைமையைப் பொறுத்து பாடசாலைகளை மூடுவதற்கு இதுவரையிலும் எவ்வித தீர்மானமும் எடுக்கப் படவில்லை என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஏதேனுமொரு பாடசாலையில் கொரோனாத் தொற்றுக் குள்ளான ஒருவர்

☞2

# கரைதுறைப்பற்று பிரதேச சபையை தக்கவைத்தது தமிழ்க் கூட்டமைப்பு!

## ரெலோ விஜிந்தன் புதிய தவிசாளராகத் தெரிவு

முல்லைத்தீவு- கரைதுறைப்பற்று பிரதேச சபையின் ஆட்சியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தக்க வைத்துள்ளது. புதிய தவிசாளராக ரெலோவைச் சேர்ந்த கமலநாதன் விஜிந்தன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்)

☞2

# நாடாளுமன்ற அமைதியின்மை பற்றி விசாரிக்க குழு நியமனம்

நாடாளுமன்றத்தில் நேற்று ஏற்பட்ட அமைதியின்மை சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்த சிரேஷ்ட உறுப்பினர்களைக் கொண்ட விசேட குழுவை அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனச் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

சபைக்குள் நேற்று ஆளுங்கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் ஏட்டிக்குப் போட்டியாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், அதன்பின்னர் எதிர்க்கட்சியைச் சேர்ந்த சிலர் சபைக்கு

☞2



# யாழ். மாநகரின் பஸார் வீதியை கழுவிச் சுத்தமாக்கிய ராணுவம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாநகரப் பகுதி இன்று காலை இராணுவத்தினரால் கழுவிச் சுத்தம் செய்யப் பட்டதோடு கிருமித் தொற்று நீக்கி மருந்து விசுறும் செயற்பாடும் முன்னெடுக்கப்பட்டது

☞2

# 16 எருமைகளின் உயிரைக் காவுகொண்ட கடுகதி ரயில்

**(ந.லோகதயாளன்)**

வவுனியா, ஏப். 22

வவுனியா, ஓமந்தைப் பகுதியில் 16 எருமை மாடுகளை கடுகதி ரயில் இன்று காலை மோதியதில் அனைத்து மாடுகளும் பலியாகியுள்ளன.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ரயிலே ஓமந்தைப் பகுதியில் மேய்ச்சலில் ஈடுபட்டிருந்த எருமை மாடுகள் மீது மோதியுள்ளது.

இதன் காரணமாக பல லட்சம் ரூபா பெறுமதியான 16 எருமை மாடுகள் குறித்த இடத்திலேயே பலியாகியுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் மேய்ச்சல் தரை இன்மையால் பலரும் தமது மாடுகளை மேய்ச்சலுக்காக வேறு இடங்களுக்குக் கொண்டுசெல்ல முடியாத நிலையில், அவை வீதியோரங்கள் மற்றும் ரயில் பாதைகளுக்கு அருகிலேயே இரை தேடி வரும் நிலையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரைதுறைப்பற்று பிரதேச சபையை .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கனகையா தவராசா, கடந்த மூன்று வருடங்களாக கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தவிசாளராகப் பதவி வகித்தார்.

இந்நிலையில் கடந்த மாதம் 18ஆம் திகதி அவர் தனது பதவி விலகலை உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தார்.

அந்தவகையில் குறித்த பிரதேசசபையின் புதிய தவிசாளருக்கான தேர்வு இன்று இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைவாக வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையில் இன்று புதிய தவிசாளரைத் தெரிவு செய்யும் வாக்கெடுப்பு இடம்பெற்றது.

இதன்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோவைச் சேர்ந்த கமலநாதன் விஜிந்தன் புதிய தவிசாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

24 உறுப்பினர்களைக் கொண்ட கரைதுறைப்பற்றுப் பிரதேச சபையின் இன்றைய வாக்கெடுப்பில் இரு உறுப்பினர்கள் கலந்துகொள்ளாத நிலையில் 22 பேர் புதிய தவிசாளர் தெரிவில் பங்கேற்றிருந்தனர்.

புதிய தவிசாளருக்கான போட்டியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் கமலநாதன விஜிந்தனும், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி சார்பில் அன்ரனி ரங்கதுரவும் போட்டியிட்டனர்.

அதையடுத்து புதிய தவிசாளர் தெரிவைப் பகிரங்க வாக்கெடுப்பின் மூலமாகவா அல்லது இரகசிய வாக்கெடுப்பின் மூலமாகவா நடத்துவது என்பது குறித்து வாக்கெடுப்பு நடைபெற்றிருந்தது.

14 வாக்குகள் பகிரங்க வாக்கெடுப்புக்கு ஆதரவாகவும், 4 வாக்குகள் எதிராகவும் செலுத்தப்பட்டிருந்தன.

இதையடுத்து நடைபெற்ற புதிய தவிசாளருக்கான தெரிவில் 15 உறுப்பினர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் கமலநாதன் விஜிந்தனுக்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியைச் சேர்ந்த 03 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஒருவரும் என நால்வர் எதிராக வாக்களித்திருந்தனர்.

சுயேச்சை உறுப்பினர்கள் 2 பேர் மற்றும் ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் என மூவர் நடுநிலை வகித்தனர்.

இதன் மூலம் 11 மேலதிக வாக்குகளால் கமலநாதன் விஜிந்தன் புதிய தவிசாளராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

## நாடாளுமன்ற அமைதி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியே ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவரைத் தாக்குவதற்கு முயற்சித்துள்ளனர் என்று குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பாக இன்று நாடாளுமன்றத்தில் சபாநாயகரிடம் முறையிட்ட சபை முதல்வர் தினேஷ் குணவர்தன, இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இதன்போது ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் தமது கருத்துக்களை முன்வைத்து, இவ்வாறான சம்பவங்களால் நாடாளுமன்றத்தின் மீது மக்கள் வைத்துள்ள மதிப்பும் இல்லாமல் போயுள்ளது என்று சுட்டிக்காட்டினர்.

இந்த விடயம் தொடர்பாக அவதானம் செலுத்திய சபாநாயகர், 7 பேர் கொண்ட சிரேஷ்ட எம்.பிக்களை உள்ளடக்கிய விசேட குழுவை அமைத்து, அதன்படி சம்பந்தப்பட்டவர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்தார்.

## யாழ். மாநகரின் பஸார் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில் அதிகளவானோர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகிய யாழ். மாநகரின் பஸார் வீதிப் பகுதியே இன்று இராணுவத்தினரால் கழுவப்பட்டு கிருமித் தொற்று நீக்கும் மருந்தும் விசிறும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது

இராணுவத்தின் 51ஆவது படையணி கட்டளை அதிகாரியின் வழிகாட்டலில் 512 ஆவது படைப்பிரிவினரால் குறித்த செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

குறித்த பகுதியைச் சுத்தமாக்கும் செயற்பாட்டில் இராணுவத்தின் 51 ஆவது படையணியின் தளபதி, 512 ஆவது படைப்பிரிவின் தளபதி மற்றும் சிப்பாய்கள் கலந்துகொண்டனர்.

## தமிழீழத்தை எதிர்த்தவர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரப் பகிர்வு குறித்து தற்போதைய அரசே பரவலாகக் கருத்துக்களைத் தெரிவித்த நிலையில், அரசை ஆட்சிக்குக் கொண்டுவரப் பாடுபட்ட தேரர்கள் மாகாண சபை முறைமையை முற்றாக எதிர்க்கின்றனர்.

எனினும், இந்தியாவின் அழுத்தம் காரணமாவே மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசு முயற்சிக்கின்றது.

கூட்டாட்சி என்ற சொல்லைக்கூட விரும்பாத இந்த அரசு இப்போது இலங்கைக்குள் சீனாவின் இராஜ்ஜியத்தைத் தோற்றுவிக்க முயற்சிக்கின்றது.

இந்நிலையில், சுமார் இரண்டாயிரம் ஆண்டுகள் எம்முடன் வாழ்கின்ற மக்களுக்கு தமிழீழத்தைத் தர முடியாதெனக் கூறியவர்களே தற்போது சீன ஈழத்துக்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கின்றனர் - என்றார்.

## பாடசாலைகளை மூடும் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடையாளம் காணப்பட்டால் இதற்கு முன்னர் நடைமுறைப்படுத்திய வகையில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

## பல்கலைக்கழகங்க ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும் இரு வாரங்களுக்குப் பல்கலைக்கழங்களைச் மீளத் திறப்பதை ஒத்திவைத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

நாட்டில் கடந்த இரு மாதங்களின் பின்னர் மீண்டும் கொரோனாத் தொற்று பரவல் தீவிரமடைந்துள்ள நிலையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் கூறினார்.

## அரசின் மிரட்டலுக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாஸ ராஜபக்ஷ.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமைச்சுப் பதவி கிடைக்கவில்லை என்ற ஆதங்கத்தில் அரசு மீதும், ஜனாதிபதி மீதும் நான் வசை பாடுகின்றேன் என்று அமைச்சர்கள் சிலர் புலம்புகின்றனர்.

அதேவேளை, ஜனாதிபதி என்னை அச்சுறுத்தவில்லை எனவும், உயிராபத்து எதுவும் எனக்கு இல்லை எனவும் மேலும் சில அமைச்சர்கள் பொய்யான கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

தத்தமது அமைச்சுப் பதவிகளைத் தக்கவைப்பதற்காக அவர்கள் என்னைத் திட்டித் தீர்க்கலாம். ஆனால், எனக்கோ அமைச்சுப் பதவி பெறும் நோக்கமோ அல்லது அமைச்சுப் பதவி கிடைக்கவில்லை என்ற ஆதங்கமோ இல்லை.

இலங்கையை வெளிநாடுகளுக்குத் தாரைவார்க்கும் நோக்குடன் ஜனாதிபதிக்கும் அரசுக்கும் மக்கள் ஆணை வழங்கவில்லை. நாடு மீண்டெழவேண்டுமென்றே மக்கள் விரும்புகின்றனர். ஆனால், அரசிலுள்ள முக்கிய தரப்பினர் நாட்டைச் சீனாவுக்குத் தாரைவார்த்து அதில் சுகபோகங்களை அனுபவிக்க முயல்கின்றனர்.

இதைத்தான் நான் பகிரங்கமாகச் சுட்டிக்காட்டினேன். உண்மைகளைக் கூறியமைக்காக நான் சிறை செல்லவும் தயார் - என்றார்.

## மீண்டும் கொரோனா; .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தமிழ், சிங்களப் புத்தாண்டு காலப் பகுதியில் ஒரு சிலர் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமல், பொறுப்பற்ற விதத்தில் செயற்பட்டதைக் காண முடிந்தது. இதன் தாக்கம் இன்னும் இரு வாரமளவிலேயே தெரியக்கூடியதாக இருக்கும்.

நாட்டில் கொரோனா வைரஸ் பரவக்கூடிய அச்சுறுத்தல் காணப்படுகின்றது. எனவே, அடுத்துவரும் ஒரு மாதம் என்பது எமக்கு மிக முக்கியமான காலப்பகுதியாகும்.

அடுத்த ஒரு மாதத்துக்குள் சுற்றுலா செல்வதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

அத்துடன், வெளிநாடுகளில் இருந்து வருபவர்களிலும் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர் - என்றார்.

## துணைவேந்தர் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விசேட நிபுணரிடம் நேற்றைய தினம் பரிசோதனைக்கு சென்ற துணைவேந்தர் இன்றைய தினம் அதற்கான தொடர் ஆலோசனை மற்றும் சிகிச்சைக்காக சென்றவேளையே ஆஸ்பத்திரி விடுதியில் அனுமதிக்கப்பட்டார்.

சுகதேகியாகவுள்ள துணைவேந்தருக்கு மேற்கொண்ட பரிசோதனையில் இதயத்தில் இரு இடங்களில் இரத்த ஓட்டம் தடைப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இவற்றின் அடிப்படையிலேயே துணை வேந்தர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார் என வைத்தியசாலைத் தரப்புக்கள் தெரிவிக்கின்றன.

**மஞ்சள் கன்று விற்பனைக்கு**
1 1/2 மாத மஞ்சள் கன்று விற்பனைக்கு உண்டு. வீட்டிற்கு எடுத்து வந்து தரப்படும்.
**தொடர்புகளுக்கு 021 492 7778**

**கடை வாடகைக்கு தேவை**
யாழ்ப்பாணம் K.K.S.வீதியில் யாழ். இந்து கல்லூரி தொடக்கம் மருதனார் மடம் வரையான எல்லைக்குள் கடை ஒன்று வாடகைக்கு உடன் தேவை.
**தொடர்புகளுக்கு - 0774135036**

**தேவை**
கைதடியில் வீட்டில் தங்கி நின்று வேலை செய்ய பணிப்பெண் தேவை.
**தொடர்புகளுக்கு 077 272 9651**

**வேலையாட்கள் தேவை**
யாழ்ப்பாணத்தில் உள்ள குளிர்பான விநியோகஸ்த நிலையத்துக்கு SALES REP தேவை.
மாதம் 45,000 சம்பாதிக்கலாம்.
தொடர்புகளுக்கு 0774737737/ 0773257747

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம்- 076 443 8622




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இறுகுகிறது கொரோனாப் பிடி!

நாட்டையே சூறையாடி பெரும் சிக்கலுக்குள் மாட்ட வைக்கப் போகும் கொரோனாப் பேரரக்கனின் கொடூரம் குறித்து முழு நாடும் சிரத்தையின்றி – பிரக்ஞையின்றி – கவனிப்பின்றி – கவலையீனமாக இருப்பது போல தோன்றுகின்றது.

தேசிய ரீதியில் கொரோனாச் சாவும் உயரத் தொடங்கி விட்டது. நேற்று மட்டும் ஐந்து பேர் கொரோனாவுடன் சாவை அரவணைத்துள்ளனர். தொற்று எண்ணிக்கை ஒரு லட்சத்தை எட்டும் நிலைக்கு வந்துள்ளது. தினசரி ஐந்நூறுக்கும் அதிகமானோர் கொரோனாவால் பீடிக்கப்படும் நிலைமை அவதானிக்கப்பட்டுள்ளது. வரும் நாள்களில் இது இன்னும் மோசமாக உயரும் என்று எதிர்வு கூறப்படுகின்றது.

தேசிய மட்டத்தில் மட்டுமல்ல, வடக்கிலும் நிலைமை இதே போன்று மோசமான கட்டம்தான். அதனை வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கேதீஸ்வரனே வெளிப்படையாகக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வருட ஆரம்பத்தில் கொரோனாத் தொற்றுப் பரவல் ஆரம்பித்தது எனினும், கடந்த வருடத்தில் கொரோனாத் தொற்றுடனான சாவு யாழ் மாவட்டத்தில் இடம்பெறவில்லை. ஆனால் கடந்த ஒரு வாரத்தில் மட்டும் அத்தகைய சாவுகள் ஐந்து யாழ் மாவட்டத்தில் நேர்ந்துள்ளன.

எதிர்வரும் மூன்று வாரங்களும் வடக்கில் கொரோனாத் தொற்று வீதம் அதிகரிக்கும் நிலை காணப்படுவதாக மாகாண சுகாதாரப் பணிப்பாளர் முன்னெச்சரிக்கை விடுத்திருக்கின்றார்.

தமிழ், சிங்களப் புதுவருடக் கொண்டாட்டங்களின் பின்னர் இலங்கையில் கொரோனாத் தொற்றுப் பரவல் தீவிரமடையலாம் என எச்சரிக்கப்பட்டிருந்தது. அதன் விளைவுகளைச் சந்திக்க – எதிர்கொள்ள – நாம் தயாராக வேண்டிய வேளை வந்து விட்டது.

புத்தாண்டுக் காலத்தில் பொதுமக்கள் மாவட்டங்களுக்கு இடையில் பெரும் எண்ணிக்கையில் பயணங்களை மேற்கொண்டமை, பொதுப் போக்குவரத்துக்களைப் பயன்படுத்தியமை, வணக்க ஸ்தலங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களில் நெருக்கியடித்து ஒன்று கூடியமை, புதுவருட விருந்தோம்பல்களுக்காக அதிக ஒன்று கூடல்களில் ஈடுபட்டமை போன்றவை காரணமாக தொற்றுப் பரவல் தீவிரமடைந்திருப்பதாகக் கருதப்படுகின்றது.

புதுவருட காலத்தில் இப்படியாகும் என்று எதிர்பார்க்கப்பட்டு எச்சரிக்கப்பட்டதுதான். ஆனாலும் அதை நாடும் மக்களும் சரியான முறையில் கவனத்தில் எடுக்கத் தவறிவிட்டமையால் நிலைமை மோசமான கட்டத்தை நோக்கி நகரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

நமக்கு அயல்நாடான இந்தியாவிலும் கூட தொற்றுப் பரவல் மிக மோசமான கட்டத்தை எட்டியுள்ளது. பழையபடி முக்கிய நகரங்கள் முடக்கத்துக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. பல இடங்களில் ஊரடங்குகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. புதுப் புதுக் கெடுபிடி கட்டுப்பாடுகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

தொற்றுப்பரவல் தொடர்பில் ஊடகங்களில் வரும் எண்ணிக்கை அறிவிப்புகள், எச்சரிக்கைத் தகவல்களை வேடிக்கையாகப் பார்க்கும் பலர் அதன் விபரீதங்களை உணராமல் இருப்பதுதான் விந்தையானது.

தொற்றாளர்களை வைத்துப் பராமரிப்பது, அவர்களுக்கு சிகிச்சையளிப்பது, நோய்த் தொற்றினால் மோசமாகப் பாதிக்கப்பட்டோருக்கு சுவாச உதவிக் கருவிகளை வழங்கி வைத்தியம் பார்ப்பது போன்றவை சமாளிக்க முடியாத எல்லையைக் கடந்து கொண்டிருப்பதாக வைத்திய வட்டாரங்கள் கலவரமடைந்துள்ளன.

அது மாத்திரமல்லாமல், இப்போது பரவி வரும் கொரோனா வைரஸ் இனம் குறித்தும் அதிர்ச்சி தரும் தகவல் வெளியாகியிருக்கின்றது.

புதிய, திரிபடைந்த, வீரியம் கூடிய வைரஸ் ஒன்றே வடக்கு உட்பட்ட பகுதிகளில் பரவி வருகின்றது எனக் கருதப்படுகின்றது. எனினும் தற்போது இடம்பெற்று வரும் ஆய்வுகள் பூர்த்தியாகும் போதுதான் அதன் தீவிரம் பற்றிய உண்மைத் தன்மை அறியப்படக் கூடும்.

எனினும் நிலைமை மோசமான, தீவிரமான கட்டத்தை அடைந்திருக்கின்றமையை அடுத்து கொரோனாத் தொற்றின் மூன்றாவது அலை பெரும் தாக்கமாக இடம்பெறலாம் என அஞ்சப்படுகிறது. அந்த நெருக்கடியைக் கட்டுப்படுத்துவதற்காகப் பல கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு சுகாதார அமைச்சுத் தீர்மானித்திருப்பதாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராய்ச்சி கூறியுள்ளார்.

நாளொன்றுக்கு பதினையாயிரம் பி.சி.ஆர். பரிசோதனைகளை நடத்துவது உட்பட பல இறுக்கமான நடவடிக்கைகள் பற்றி அவர் அறிவித்தாலும், முக்கிய விடயமான தடுப்பூசி ஏற்றலை அதிகரிப்பது குறித்து அவர் அதிகம் பிரஸ்தாபிக்கவில்லை.

அதை – தடுப்பூசி ஏற்றலை – வினைத்திறனான முறையில் நடைமுறைப்படுத்தும் ஏற்பாடு இடம்பெறாத வரை கொரோனாப் பேரரக்கனின் இப்போதைய தாக்கத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது சாத்தியமற்றதாகவே இருக்கும்.

# ஹரின், மனுஷவை உடன் விசாரியுங்கள்

## சி.ஐ.டியில் ஆளும் கட்சி எம்.பிக்கள் முறைப்பாடு

கொழும்பு, ஏப்.22

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சூத்திரதாரி குறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார வெளியிட்ட கருத்துக்களை ஆராய்ந்து சம்பந்தப்பட்டவர்களுக்கு தண்டனை பெற்றுக் கொடுக்கும்படி, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

சுமார், 40 நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பம் அடங்கிய முறைப்பாட்டுப் பத்திரம் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரி தொடர்பில் தம்மிடம் இருப்பதாகக் கூறும் ஆதாரங்களை, அவர்களிடம் விசாரணை மேற்கொண்டு வெளிப்படுத்த வேண்டும் என்றும், இது தேசியப் பாதுகாப்புக்கு மிகவும் தேவையானது என்றும் குறித்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் குறித்து அவர்கள் அறிந்திருக்கும் இரகசியங்களை வெளிப்படுத்த வேண்டும் எனவும், இதனை வைத்துக்கொண்டு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் இலாபம் தேட முனைகின்றனர் எனவும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டை சஞ்ஜீவ எதிரிமன்ன, பிரமித பண்டார, திஸ்ஸ கெட்டியாராச்சி உள்ளிட்ட ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் பதிவு செய்துள்ளனர்.

# தரைவழி வாகனம் மோதியதால் ஸ்ரீலங்கன் ஏயர்லைன்ஸ் விபத்து




மாலைதீவின் சுற்றுலா தளமான பிரதான சர்வதேச நுழைவாயிலான மாலே சர்வதேச விமான நிலையத்தில் வைத்து ஸ்ரீலங்கன் ஏயர் லைன்ஸ் நிறுவனத்தின் 'ஏ320என்.இ.கியு' என்ற விமானம் சேதமடைந்தது.

4ஆர் – ஏ.என்.பி. என பதிவுசெய்யப்பட்ட நான்கு ஆண்டு பழைமையான இந்த விமானம், இந்தியப் பெருங் கடல் முழுவதும் அதன் பயணத்தில் இருந்தபோது மாலே சர்வதேச விமான நிலையத்தின் தரை சேவை வாகனத்துடன் தற்செயலாக நேற்று முன்தினம் புதன்கிழமை மோதியமையால் சேதத்துக்குள்ளாகியுள்ளது.

புதன்கிழமை பிற்பகல் 13:13 மணியளவில் கொழும்பிலிருந்து புறப்பட்ட இந்த விமானம் ஒரு மணிநேரம் ஒன்பது நிமிட பயணத்திற்கு பின்னர் மாலேயை சென்றடைந்துள்ளது.

இந்த சம்பவம் எவ்வாறு நிகழ்ந் தது என்பது பற்றி மேலதிக விவரங்களை அறிய இலங்கை ஏயர்லைன்ஸ் நிறுவனம் மாலே சர்வதேச விமான நிலையத்தை அணுகியுள்ளது.

# அல்வாய் கொலை தொடர்பில் சந்தேகத்தில் நால்வர் கைது

பருத்தித்துறை அல்வாய் பகுதியில் குடும்பத் தகராறு காரணமாக இடம்பெற்ற மோதலில் குடும்பத்தலைவர் ஒருவர் வாள் வெட்டுக்கு இலக்காகி உயிரிழந்த நிலையில் இருதரப்பிலும் நால்வர் கைது செய்யப்பட்டதுடன் மேலும் இருவர் தேடப்படுகின்றனர்.

அவர்களில் இருவர் மீது கொலைக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

அல்வாயில் நேற்று புதன்கிழமை பிற்பகல் இரு பகுதியினருக்கு இடையே இடம்பெற்ற மோதலில் இரண்டு பிள்ளைகளின் தந்தையான முருகராசா கௌசிகன் (வயது 31) என்பவர் வாள்வெட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

அல்வாய் வடக்கு முத்துமாரி அம்மன் கோவிலடியில் உறவினர்களுக்கு இடையில் காசு கொடுக்கல் வாங்கல் பிரச்சினை வாய்த்தர்க்கமாக ஆரம்பித்து வாள் வெட்டில் முடிந்தது. சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் 6 பேர் படுகாயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றனர். சிகிச்சை பெற்றவர்களில் இருவர் வாள் வெட்டுத் தாக்குதலை நடத்தினர் எனவும் மேலும் இருவர் கொல்லப்பட்டவருடன் மோதலில் ஈடுபட்டவர்கள் எனவும் பருத்தித்துறை பொலிஸாரால் இன்று (வியாழக்கிழமை) கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் இருவர் தலைமறைவாகியுள்ள நிலையில் தேடப்படுகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# மண்டூரில் இரு விபத்து: ஒருவர் பரிதாப சாவு

வெல்லாவெளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மண்டூர் பிரதேசத்தில் இடம்பெற்ற இரு விபத்துக்களில் ஒருவர் படுகாயம் மற்றுமொருவர் உயிரிழந்த சம்பவம் நேற்று புதன்கிழமை இடம்பெற்றுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை தனது வயல் வேலையை முடித்துவிட்டு தனது வயலுக்குத் தெளிப்பதற்கு கிருமிநாசினி வாங்கச்சென்றபோது 64 வயதுடைய கந்தையா – நடராசா என்பவர் மண்டூர் பிரதான வீதியில் வீதியைக் குறுக்கிட்ட மாட்டில் மோதியதில் படுகாயம் அடைந்த நிலையில் மண்டூர் பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனாவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று (புதன்கிழமை) உயிரிழந்துள்ளர்.

அதேதினத்தில் வெல்லாவெளி பிரதேச செயலகத்தில் தனது அலுவலகக் கடமையை முடித்துவிட்டு தனது வீடு திரும்பிய பெண் ஒருவர் வீதியைக் குறுகிட்ட பாம்பைக் கண்டு தனது மோட்டார் சைக்கிளை மறுதிசையில் திருப்பியபோது எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயம் அடைந்த நிலையில் மண்டூர் பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களுவாஞ்சிகுடி சுற்றுலா நீதிமன்ற நீதிவான் அவர்களின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்குச் சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை – தவக்குமார். சடலத்தை பார்வையிட்ட பின்னர் பிரேதத்தை பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டார்.

மட்டக்களப்பு படுவான்கரை பிரதேசங்களில் அதிகமான கட்டாக்காலி மாடுகள் வீதியில் இரவுவேளைகளில் நடமாடுகின்றமையால் அதிகமான விபத்துக்களில் பல உயிர்களை இழக்கநேரிடுகின்றது. எனவே உரிய அதிகாரிகள் இந்த விடயம் பற்றி உரிய நடவடிக்கை எடுக்காமல் இருக்கின்றனர் என பிரதேசவாசிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாத் தடுப்பூசிக்கு விலை; ராகுல், ப.சிதம்பரம் கண்டனம்!



'கொரோனாத் தடுப்பூசிக்கு விலை நிர்ணயம் செய்து மத்திய அரசு அறிவித்துள்ளமை நாட்டுக்கே பேரழிவு' என்று காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி விமர்சித்துள்ளார்.

கொரோனாத் தடுப்பூசியை அரசு மருத்துவமனைகள் 400 ரூபாவுக்கும் தனியார் மருத்துவமனைகள் 600 ரூபாவுக்கும் கொள்முதல் செய்து கொள்ளலாம் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. இந்த அறிவித்தலுக்கு ராகுல் காந்தி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து டுவிட்டரில் பதிவிட்டுள்ள ராகுல் காந்தி, 'இது நாட்டிற்கே பேரழிவு. மோடியின் நண்பர்களுக்கான வாய்ப்பு. மத்திய அரசு மக்களுக்குச் செய்துள்ள அநீதி!' என்று விமர்சித்துள்ளார்.

'கொரோனா தடுப்பூசிக்கு விலை நிர்ணயம் செய்திருப்பதன் மூலம் மாநில அரசுகளை மத்திய அரசு சிக்கலில் மாட்டிவிட்டுத் தப்பித்துக் கொள்ள முயல்கிறது' என்று முன்னாள் மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் கருத்துத் தெரிவித்துள்ளார்.

'5 நபர்கள் கொண்ட நடுத்தரக் குடும்பத்தால் இரு தவணை தடுப்பூசியை பணம் கொடுத்து வாங்கிக் கொள்ள முடியுமா?' என்றும் அவர் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

# மன்சூர் அலிகானின் பிணை மனு தள்ளுபடி



கொரோனாத் தடுப்பூசி குறித்து அவதூறு பரப்பியதாகப் பதிவான வழக்கில், நடிகர் மன்சூர் அலிகானின் முன் பிணை மனுவை சென்னை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

கொரோனா கட்டுப்பாடுகள், தடுப்பு நடவடிக்கைகள் குறித்து நடிகர் மன்சூர் அலிகான் கடுமையான விமர்சனங்களை முன்வைத்திருந்த நிலையில், அவரின் பேச்சுக்கள் அரசின் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் மக்கள் நலப் பணிகளுக்கு எதிராக இருக்கின்றது என புகார் அளிக்கப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் வடபழனி காவல் நிலையத்தில், பொது அமைதியைக் கெடுத்தல், தொற்று நோயைப் பரப்பும் தீய எண்ணத்துடன் நடந்து கொள்ளுதல் உள்ளிட்ட 5 பிரிவுகளின் கீழ் இவர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக சென்னை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன் பிணை கேட்டு மன்சூர் அலிகான் தாக்கல் செய்த மனுவில், 'கொரோனாத் தடுப்பூசி செலுத்துவதைக் கட்டாயப்படுத்தக் கூடாது என்றுதான் கூறினேனே தவிர, தடுப்பூசி குறித்து தவறாக எதுவும் தெரிவிக்கவில்லை' என அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்த மனு விசாரணைக்கு வந்த போது காவல்துறைத் தரப்பில் ஆஜரான நகர அரசு குற்றவியல் வழக்கறிஞர், 'பொதுமக்கள் மத்தியில் தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் செயல்பட்டுள்ளதால் முன் பிணை வழங்கக்கூடாது' என ஆட்சேபம் தெரிவித்தார்.

இதையடுத்து, முதல் தகவல் அறிக்கை குறித்த விவரங்கள் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை என்பதால், புதிய மனுவைத் தாக்கல் செய்ய உத்தரவிட்டு மன்சூர் அலிகானின் முன்பிணை மனுவை தள்ளுபடி செய்து நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# அசாமுக்கு வருவோருக்கு 7 நாள்கள் வீட்டுத்தனிமை மாநில அரசு அறிவிப்பு!

நாடு முழுவதும் கொரோனா வைரஸின் இரண்டாவது அலை தாக்கம் கடுமையாக உள்ளது. கடந்த சில நாள்களாக இரண்டரை லட்சத்திற்கும் மேல் ஒரே நாளுக்கான கொரோனாப் பாதிப்பு இந்தியாவில் பதிவாகி வருகிறது. நாட்டின் பல மாநிலங்களிலும் இரவு நேர ஊரடங்கு போன்ற கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

வெளி மாநிலங்களில் இருந்து அசாமுக்கு வருபவர்கள் 7 நாள்கள் கட்டாயமாக வீட்டில் தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும் என அந்த மாநில அரசு அறிவித்துள்ளது. கொரோனா நெகட்டிவ் சான்றிதழ் வைத்திருந்தாலும் தனிமைப்படுத்துதல் அவசியம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அசாமில் கடந்த 24 மணி நேரத்தில் 1,665 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கொரோனா பாதிப்பால் நேற்று மட்டும் அங்கு ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர். அசாமில் வரும் மே முதலாம் திகதி முதல் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் இலவசமாக கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்படும் என்று மாநில அரசு நேற்று அறிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# ஊரடங்கிலும் விவசாயிகள் போராட்டம்

## 146 ஆவது நாளை எட்டியது

மத்திய அரசு கொண்டுவந்துள்ள வேளாண் சட்டங்களுக்கு எதிராக டெல்லி எல்லையில் விவசாயிகள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். கடந்த நவம்பர் 27ஆம் திகதி தொடங்கிய விவசாயிகள் போராட்டம் ஐந்து மாதங்களையும் தாண்டி தொடர்ந்து நடைபெற்று வருகிறது

இது தொடர்பாக மத்திய அரசுக்கும் விவசாயிகளுக்கும் இடையே இதுவரை நடைபெற்ற அனைத்துப் பேச்சுக்களிலும் எவ்வித உடன்பாடும் ஏற்படவில்லை. இதனால் விவசாயிகள் தங்கள் போராட்டத்தை தொடர்ந்து நடத்திவருகின்றனர்.

விவசாயிகளின் போராட்டம் இன்று 146 ஆவது நாளை எட்டியுள்ளது. டெல்லி எல்லைகளான சிங்கு, திக்ரி, காசியாபாத் ஆகிய பகுதிகளில் கூடாரங்கள் அமைத்து விவசாயிகள் போராடி வருகின்றனர். டெல்லியில் கொரோனா பரவல் அதிகரித்து வரும் நிலையில் அங்கு வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 5 மணி வரை முழு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# கடத்தலுக்கு உதவிய கேரள சுங்க அதிகாரிகள் மீது வழக்குப் பதிவு செய்தது சி.பி.ஐ.

கடத்தல்காரர்களுக்கு உதவி செய்தார்கள் எனக் கூறப்பட்ட புகாரில், கோழிக்கோடு விமான நிலைய சுங்க இலாகா அதிகாரி கள் 14 பேர் மீது சி.பி.ஐ. வழக்குப் பதிவு செய்துள்ளது.

கேரள மாநிலம், கோழிக்கோடு சர்வதேச விமான நிலையம் வழியாக தங்கம் உட்பட பல்வேறு பொருள்கள் கடத்தப்படுவது அதிகரித்து வந்தது. இது தொடர்பாக ஏராளமான புகார்கள் அளிக்கப்பட்டதையடுத்து, கடந்த 2 மாதங்களுக்கு முன்பு சில சுங்க இலாகா அதிகாரிகளின் வீடுகளில் சி.பி.ஐ. அதிரடியாக சோதனை செய்தது. இதில் லட்சக்கணக்கில் பணமும் பொருள்களும் ஆவணங்களும் கைப்பற்றப்பட்டன.

இது தொடர்பாக சுங்க இலாகா அதிகாரிகள் மீது வழக்குப் பதிவு செய்வதற்கு சி.பி.ஐ. சார்பில் கேரள அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. இதற்கான அனுமதியை நேற்று கேரள அரசு வழங்கியதையடுத்து, கடத்தல்காரர்களுக்கு உதவியதாக 14 சுங்க இலாகா அதிகாரிகள் மீது சி.பி.ஐ. வழக்குப்பதிவு செய்துள்ளது. வழக்குப் பதிவு செய்யப்பட்டவர்களில் நான்கு பேர் உயர் அதிகாரிகள் என்றும் மற்றவர்கள் பரிசோதகர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# மனித உயிரை விட தொழிற்சாலை முக்கியமா?

## ஒக்சிஜன் தேவைக்கான வழக்கில் நீதிபதிகள் கேள்வி

டெல்லியில் பல்வேறு மருத்துவமனைகளை நடத்தி வரும் பாலாஜி மருத்துவ மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பில் டெல்லி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், "உடனடியாக ஒக்சிஜன் சிலிண்டர்கள் சப்ளை செய்யாவிட்டால், எங்கள் மருத்துவமனையில் உள்ள கொரோனா நோயாளிகளின் உயிருக்கே ஆபத்தாகி விடும்" என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கை அவசர வழக்காக எடுத்து நேற்று விசாரித்த நீதிபதிகள் இவரும் மத்திய அரசைக் கடுமையாக கண்டித்துள்ளனர்.

'நாட்டில் ஆயிரக்கணக்கான மக்கள் சாக வேண்டுமென விரும்புகிறீர்களா? துயரமான இந்த சமயத்தில் கூடவா அரசு விழித்துக் கொள்ளாது? மருத்துவமனைகள் ஒக்சிஜன் இல்லாமல் தவிக்கும் போது, உருக்கு ஆலைகள் மட்டும் ஒக்சிஜனைக் கொண்டு இயங்குவதைப் பார்க்கும் போது அதிர்ச்சியாக இருக்கிறது. மனிதாபிமானமே இல்லாமல் போய்விட்டதா?' என்று அவர்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

'டெல்லியில் மட்டுமல்ல, ஒட்டுமொத்த நாட்டிலும் இதே நிலை நீடிக்கிறது. உண்மையிலேயே இது மோசமான காலகட்டமாகும். தொழிற்சாலைகளைப் பற்றிக் கவலைப்படும் நீங்கள் மக்கள் சாவதைப் பற்றி கவலைப்படமாட்டீர்களா? மனித உயிரைக் காட்டிலும் எதுவும் முக்கியமில்லை. எனவே நீங்கள் பிச்சை எடுப்பீர்களோ, கடன் வாங்குவீர்களோ, திருடுவீர்களோ தெரியாது, தேவையான ஒக்சிஜனை உடனே வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும்' என்று அவர்கள் உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

இதையடுத்து, டெல்லிக்கு வழங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்ட ஒக்சிஜன் சிலிண்டர்கள் உடனடியாக கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என மத்திய அரசுத் தரப்பில் உறுதி அளிக்கப்பட்டது.

# இலவசமாக கொரோனாத் தடுப்பூசி தெலுங்கு திரையுலகினர் முன்முயற்சி

சினிமா கலைஞர்களைக் காக்க முன்னெடுக்கப்பட்டுள்ள புதிய முயற்சி பாராட்டுகளைப்பெற்று வருகிறது.

கொரோனா இரண்டாம் அலை பாகுபாடு இல்லாமல் அனைத்து மாநிலங்களிலும் பாதிப்பை ஏற்படுத்தி வரும் நிலையில், தெலுங்கு திரையுலகம் தங்கள் துறை சார்ந்தவர்களைப் பாதுகாக்க புதிய முயற்சியை முன்னெடுத்துள்ளது.

அதன்படி, தெலுங்கு திரைப்படத் துறையை உள்ளடக்கிய அனைத்து சினிமாக் கலைஞர்கள் மற்றும் திரைத் துறை சம்பந்தப்பட்ட ஊடகவியலாளர்களுக்கும் கொரோனா பேரிடர் அறக்கட்டளை (சி.சி.சி.) சார்பாக இலவச தடுப்பூசி வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் மூலம் 45 வயதிற்கு மேற்பட்ட சினிமாத் துறையினர் இலவசமாக தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளலாம். திரைக் கலைஞர்கள் மட்டுமல்லாமல் அவர்களின் துணைகளும் தடுப்பூசிகளைப் பெற இயலும் என்றும், தங்கள் சார்ந்த தொழிற்சங்கங்கள் மூலம் பதிவு செய்து கொண்டு, வழங்கப்படும் ஒழுங்கு எண் அடிப்படையில் தடுப்பூசியைச் செலுத்திக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு பிறப்பிக்கப்பட்ட முழு ஊரடங்கு காரணமாக பாதிக்கப்பட்ட தெலுங்குத் திரையுலகினருக்கு உதவ 'கொரோனா க்ரைஸிஸ்' என்ற தொண்டு நிறுவனத்தை நடிகர் சிரஞ்சீவியோடு ஏனைய திரைப் பிரபலங்களும் இணைந்து ஆரம்பித்திருந்தனர். இந்தத் தொண்டு நிறுவனத்தின் மூலம் சினிமா தொழிலாளர்களுக்கு பல்வேறு உதவிகளையும் இவர்கள் மேற்கொண்டிருந்தனர். தற்போது, கொரோனாப் பாதிப்பு மீண்டும் தீவிரமடையும்



நிலையில் ஏனையோருக்கு முன்மாதிரியாக இந்தத் திட்டத்தையும் ஆரம்பித்துள்ளனர்.

இந்தத் தகவலை தெலுங்கு சூப்பர் ஸ்டார் சிரஞ்சீவி தனது சமூக வலைத் தளங்கள் மூலம் தெரியப்படுத்தியுள்ளார். தடுப்பூசிபெறுபவர்களுக்கு அடுத்த மூன்று மாதங்களுக்கு இலவச மருத்துவ ஆலோசனை கிடைக்கும் என்றும், தேவையான மருந்துகள் மானிய விலையில் வழங்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தோனேஷியாவில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த நீர்மூழ்கிக் கப்பல் மாயம்: 53 வீரர்களின் கதி என்ன?

## இரண்டாம் நாளாக தொடரும் தேடுதல் பணி







இந்தோனேஷியாவின் வடக்கு பகுதியில் அமைந்துள்ள பாலி தீவு அருகே அந்த நாட்டு இராணுவத்துக்குச் சொந்தமான 'நங்கலா 402' என்கிற நீர்மூழ்கி கப்பல் நேற்று வழக்கமான பயிற்சியில் ஈடுபட்டிருந்தது. இந்த நீர்மூழ்கிக் கப்பலில் இராணுவ 53 வீரர்கள் இருந்தனர்.

இந்த நிலையில் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் பாலி தீவிலிருந்து 95 கிலோ மீற்றர் தொலைவில்கடலில்பயணித்துக்கொண்டிருந்தபோது இந்த நீர்மூழ்கிக் கப்பல் திடீரென கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்து மாயமானது. நீர்மூழ்கிக் கப்பல் என்ன ஆனது, அதில் உள்ள 53 வீரர்களின் கதி என்ன? என்பது தெரியவில்லை.

கப்பல் இருந்த பகுதியில் எண்ணைப்படலம் காணப்பட்டதை தொடர்ந்து அங்கு போர்க் கப்பல்கள் குவிக்கப்பட்டு மாயமான நீர்மூழ்கிக் கப்பலை தேடும் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன என அந்த நாட்டின் இராணுவத் தளபதி தஜ்ஜான்டோ கூறினார்.

மேலும் நீர்மூழ்கி மீட்பு கப்பல்களை வைத்துள்ள ஆஸ்திரேலியா மற்றும் சிங்கப்பூரிடம் உதவி பெற்றுள்ளதாகவும் தஜ்ஜான்டோ தெரிவித்தார்.

# பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் அமெரிக்காவில் கறுப்பின சிறுமி சாவு



அமெரிக்காவின் ஒகியோ மாகாணம் கொலம்பஸ் நகரில் நேற்று முன்தினம் மாலை கத்திக்குத்து சம்பவம் நடப்பதாக பொலிஸாருக்கு தொலைபேசியில் தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன் பேரில் அங்கு விரைந்து சென்ற பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் அதே பகுதியைச் சேர்ந்த மாகியா பிரையன்ட் என்கிற 16 வயது கறுப்பின சிறுமி கொல்லப்பட்டாள். இந்த சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. கறுப்பின சிறுமியை பொலிஸார் எதற்காக சுட்டு கொன்றனர் என்கிற உண்மை வெளிவரவில்லை.

விரிவான விசாரணைக்கு பிறகு உண்மை என்ன என்பது தெரியவரும் என கொலம்பஸ் நகர மேயர் தெரிவித்துள்ளார்.

கடந்தாண்டு மே மாதம் மினசோட்டா மாகாணம் மினியாப்பொலிஸ் நகரில் ஜார்ஜ் பிளாய்ட் என்கிற ஆபிரிக்க அமெரிக்கரின் கழுத்தில் பொலிஸ் அதிகாரி டெரெக் சாவின் கால் முட்டியை வைத்து அழுத்தி கொன்ற வழக்கில் டெரெக் சாவினை குற்றவாளி என கூறிநீதிமன்றம் தீர்ப்பளித்த அரை மணி நேரத்திற்குள் கறுப்பின சிறுமி பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதனிடையே கறுப்பின சிறுமியை பொலிஸார் சுட்டுக் கொன்றதை கண்டித்து கொலம்பஸ் நகரில் பெரும் போராட்டம் வெடித்தது. அந்த நகரில் உள்ள பொலிஸ் தலைமையகம் மற்றும் பொலிஸ் நிலையங்கள் முன்பு நூற்றுக்கணக்கான மக்கள் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# 2025 ஆம் ஆண்டுக்குள் சொந்தமாக விண்வெளி ஆய்வு மையம்; ரஷ்யா முடிவு


தற்போது பூமிக்கு மேல் சுழலும் சர்வதேச விண்வெளி ஆய்வு மையம் கடந்த 1998 ஆம் ஆண்டு ரஷ்யா மற்றும் அமெரிக்காவின் கூட்டுமுயற்சியில் அமைக்கப்பட்டது. அதன் பின்னர் ஜப்பான், கனடா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் விண்வெளி ஆய்வு நிறுவனங்களும் இதில் கைகோர்த்தன.

தற்போது மேற்கூறிய நாடுகளைச் சேர்ந்த விண்வெளி வீரர்கள் சுழற்சி முறையில் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தில் தங்கி இருந்து ஆய்வுப்பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்தநிலையில் பல்வேறு விவகாரங்களில் மேற்கத்திய நாடுகளுடன் பதற்றம் நீடித்து வரும் சூழலில் ரஷ்யா தனக்கென சொந்தமாக விண்வெளி ஆய்வு மையத்தை அமைக்க முடிவு செய்துள்ளது.

சர்வதேச விண்வெளி ஆய்வு மையம் தொடர்பாக பிற நாடுகளுடன் ரஷ்யா மேற்கொண்டுள்ள ஒப்பந்தம் வருகிற 2024 ஆம் ஆண்டுடன் காலாவதியாகிறது. இந்த சூழலில் தான் 2025 ஆம் ஆண்டுக்குள் சொந்தமாக விண்வெளி ஆய்வு மையத்தை அமைக்க முடிவு செய்திருக்கின்றது என ரஷ் யாவின் விண்வெளி ஆய்வு நிறுவனமான ரோஸ்காஸ்மோஸ் தெரிவித்துள்ளது.

அதே சமயம் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து வெளியேறுவது குறித்து இன்னும் முடிவு செய்யவில்லை என்றும் 2024 இற்கு அப்பால் ஒத்துழைப்புக்கான படிவங்கள் மற்றும் நிபந்தனைகள் குறித்து கூட்டாளிகளுடன் பேச்சுக்கள் தொடங்கும் போது, இதுபற்றி முடிவு செய்யப்படும் என்றும் ரோஸ்காஸ்மோஸ் தெரிவித்துள்ளது.

# செவ்வாயில் ஒக்சிஜனை தயாரித்து புதிய வரலாறு படைத்தது நாசா!



பெர்சிவரன்ஸ் ஆய்வூர்தி செவ்வாயின் வளிமண்டலத்தில் உள்ள கார்பன்டைஆக்சைடில் இருந்து ஒக்சிஜனை தயாரித்துள்ளது. கார் பேட்டரி அளவுள்ள மாக்சி எனப்படும் தங்கப்பெட்டியில் உள்ள கருவிகள் மூலம், ஒரு விண்வெளி வீரர் 10 நிமிடங்கள் சுவாசிக்க தேவையான அளவான, 5 கிராம் ஒக்சிஜன் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஒரு தொன் அளவுள்ள இதே கருவியை செவ்வாய்க்கு அனுப்பினால் அதன் மூலம் 25 தொன் ஒக்சிஜனை தயாரிக்க முடியும் என்பதால், இந்த சோதனை முயற்சியின் வெற்றி முக்கியத்துவம் வாய்ந்துள்ளது.

# சீனாவுடனான 2 ஒப்பந்தங்களை ரத்து செய்தது ஆஸ்திரேலியா



ஆஸ்திரேலியாவில் உள்நாட்டு அரசியலில் ரகசிய வெளிநாட்டு தலையீட்டை தடை செய்யும் நோக்கில் கடந்த 2018 ஆம் ஆண்டு தேசிய பாதுகாப்புச் சட்டங்கள் இயற்றப்பட்டன.

இந்த சட்டங்கள் சீனாவுக்கு எதிரான பாரபட்சம் கொண்டவை என சீனா கடுமையாக விமர்சித்தது. மேலும் இந்த விவகாரம் ஆஸ்திரேலியா சீனா இடையிலான உறவை மோசமாக்கியது. இந்த நிலையில் இந்த தேசியப் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் ஆஸ்திரேலியாவின் தேசிய நலனுக்கு எதிராக இருக்கின்றது எனக் கூறி சீனாவுடனான 2 ஒப்பந்தங்களை ஆஸ்திரேலியா ரத்து செய்துள்ளது.

சீனாவின் லட்சிய திட்டமான பெல்ட் மற்றும் சாலை திட்டத்தின் கீழ் ஆஸ்திரேலியாவின் விக்டோரியா மாகாண அரசுடன் கடந்த 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் சீன அரசு ஏற்படுத்திக் கொண்ட 2 ஒப்பந்தங்களைதான் ஆஸ்திரேலியா தற்போது ரத்து செய்துள்ளது.

இது தவிர விக்டோரியா மாகாணக் கல்வி துறையுடன் கடந்த 1999 ஆம் ஆண்டு சிரியாவும் 2004 ஆம் ஆண்டில் ஈரானும் ஏற்படுத்திக் கொண்ட 2 ஒப்பந்தங்களும் ரத்து செய்யப்பட்டுள்ளன.

# கொரோனாக் கட்டுப்பாடுகளைக் கண்டித்து ஜேர்மனியில் மீண்டும் மக்கள் ஆர்ப்பாட்டம்




ஜேர்மன், ஏப்.22

ஜேர்மனியில் மீண்டும் கொரோனா கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்பட்டதை கண்டித்து பெர்லினில் திரண்ட ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே மோதல் வெடித்தது.

கொரோனாப் பரவல் அதிகரித்த போதும் 16 மாநிலங்களில் ஊரடங்கு கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்படாததால் அதிபர் ஏஞ்செல்லா மெர்கெல் (Angela Merkel) இரவு நேர ஊரடங்கு உள்ளிட்ட பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்தார்.

அதனைக் கண்டித்து சாலை மறியலில் ஈடுபட்டவர்களை பொலிஸார் வலுக்கட்டாயமாக அப்புறப்படுத்தினர். பொலிஸார் மீது போத்தல்களை வீசிய 7 பேர் கைது செய்யப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


# மன்னார் மாவட்டமும் புலவு நெற்செய்கையும்

S.F.C உதயசந்திரன்
உதவி பணிப்பாளர், மாந்தை வலயம்
விவசாய திணைக்களம், மன்னார்

இலங்கையர்களின் பிரதான உணவாக அரிசியானது காணப்படுவதால் விவசாய நடவடிக்கைகளில் நெற்செய்கையானது பிரதான இடத்தைப் பெற்றுக்கொள்கின்றது. அந்த வகையில் மன்னார் மாவட்டத்திலும் நெற்செய்கையானது முக்கிய ஓர் விவசாய நடவடிக்கையாக உள்ளது. சுமார் 23,000 விவசாய குடும்பங்கள் 50000 ஏக்கருக்கும் அதிகமாக காலபோகத்தில் நெற்செய்கையை மேற்கொள்கின்றனர். இது மொத்த நெல் உற்பத்தியில் 3.1% மன்னார் மாவட்டம் பங்கு கொள்ளுகிறது. இதனால்தான் இலங்கையின் அரிசிக்கிண்ணமாக (Rice bowl) மன்னார் மாவட்டம் அழைக்கப்படுகின்றது. மன்னார் மாவட்டத்தின் நெற்செய்கையின் போக்கு கீழ் வரும் வரைபின் மூலம் தெளிவுபடுத்தப்படுகின்றது.




மேலுள்ள வரைபு மன்னார் மாவட்டத்தில் நெற்செய்கையானது காலபோகத்தில் ஒரு தொடர் அதிகரிப்பை காட்டுகின்றது. கடந்த காலபோகத்தில் 51,687.5 ஏக்கர் விஸ்தீரத்தில் செய்கை செய்யப்பட்ட நெற்செய்கையானது 94,194 மெற்றிக் தொன் உற்பத்தியை ஏற்படுத்தியுள்ளது. எனினும் சிறுபோகத்தில் நெற்செய்கையானது ஒப்பிட்டளவில் குறைந்தளவே காணப்படுகின்றது. ஆயினும் கடந்த வருடங்களில் சிறுபோக செய்கையும் ஒரு தொடர்ச்சியான அதிகரிப்பை காட்டுகின்றது.

### சிறுபோக நெற்செய்கையும் கட்டுக்கரைகுளமும்


மன்னார் மாவட்டத்தின் மழைவீழ்ச்சியானது மிகக் குறைந்தளவில் காணப்படுவதால் சிறுபோகத்தில் நெற்செய்கையானது மிககுறைந்தளவிலேயே காணப்படுகின்றது. ஆயினும் மன்னாரில் அமைந்துள்ள கட்டுக்கரை குளமானது சிறுபோக நெற்செய்கையில் பாரிய பங்களிப்பை வழங்குகின்றது. மாந்தை மேற்கு மன்னார் நகரம் மற்றும் நானாட்டன் பிரதேச செயலக பிரிவுகளுக்கு இக்கட்டுக்கரை குளமானது நீரை வழங்குகின்றது. 38 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு நீர் ஏந்தும் பகுதியை கொண்டுள்ள கட்டுக்கரை குளமானது 31,500 ஏக்கர் அடி கொள்ளளவை கொண்டுள்ளதுடன் சுமார் 24,483 ஏக்கர் நெற்செய்கையை இதனால் மேற்கொள்ள முடியும். மேலும் 162 ஊட்டல் குளங்களையும் 10 பிரதான கால்வாய்களையும் கொண்டுள்ளது. இவற்றின் மூலம் சுமார் 90 விவசாய அமைப்புக்களைச் சேர்ந்த ஏறக்குறைய 15,000 விவசாய குடும்பங்கள் பயன் பெறுகின்றனர்.

### மன்னார் மாவட்டத்தின் நெல் உற்பத்தி

மன்னார் மாவட்டத்தின் மொத்த சனத்தொகையானது ஏறக்குறைய 160,000 ஆக காணப்படுகிறது. மேலும் ஆண்டுக்கான சராசரி நெல் கொள்ளளவானது

| தேவைகள் | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|---|---|
| உணவுத்தேவை | 19200 | 19200 | 19200 | 20000 | 20000 |
| விதைத்தேவை | 2087 | 2720 | 3193 | 3297 | 3394 |
| மொத்தம் | 21287 | 21920 | 22393 | 23297 | 23323* |
| உற்பத்தி | 116170 | 69443 | 91936 | 102293 | 105543* |
| மேலதிக உற்பத்தி | 94883 | 47523 | 69543 | 78996 | 82220* |

*எதிர்பார்க்கப்படும் தரவுகள்



120 கிலோ கிராமாகவும் விதை தேவையானது ஏக்கருக்கு 2 புசலாகவும் காணப்படுகிறது. இவற்றின் தரவுகளை கொண்டு மேலதிக உற்பத்தியை நாம் பின்வருமாறு கணிப்பிடலாம்

### புலவு செய்கை

சிறுபோகத்தில் மன்னார் மாவட்டத்தின் மழை வீழ்ச்சியானது மிக குறைவாக காணப்படுவதால் வயல் நிலங்களில் நெற்செய்கையை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. இதனால் விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு கட்டுக்கரை குளத்தின் கீழ் உள்ள நீர் ஏந்தும் பகுதிகளில் சிறுபோக செய்கையானது மேற்கொள்ளப்படுகின்றது.




கட்டுக்கரை குளத்தின் புவியியல் வரைபடம்
ஆதாரம் - Google

மேற்கொள்ளப்படுகின்ற நெற்செய்கையின் விஸ்தீரமானது கட்டுக்கரை குளத்தின் நீர் மட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படுகின்றது. இவையனைத்தும் அரசகாணிகளாக காணப்படுவதுடன் புலவு செய்கையின் வீஸ்தீரணம் மற்றும் புலவுகள் என்பன அரசாங்க அதிபரின் தலைமையில் உள்ள கட்டுக்கரை குள கூட்டங்களில்தீர்மானிக்கப்படுகிறது. இப் புலவு செய்கை முறையானது இலங்கையில் மன்னார் மாவட்டத்தில் மட்டும் காணப்படும் ஓர் நெற் செய்கை முறையாகும்.

### புலவு நெற்செய்கையை விவசாயிகள் பெற்றுக்கொள்ளும் முறை

புலவு செய்கையில் விவசாயிகள் தங்களுக்கான சிறுபோக நெற்செய்கையின் விஸ்தீரத்தை ஈவு அடிப்படையில் பெற்றுக்கொள்கின்றனர். ஈவு முறைபற்றிய சிறு விளக்கம் பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது. சிறுபோகத்திற்கான ஈவு முறையானது கட்டுக்கரை குளத்தின் நீரின் அளவு மற்றும் கடந்த போகத்தில் செய்கை மேற்கொள்ளப்பட்ட விஸ்தீரணத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. உதாரணமாக இச் சிறுபோகத் தில் கட்டுக்கரை குளத்தின் நீர் கொள்ளளவானது 2,000 ஏக்கர் நெற்செய்கையை மேற்கொள்ள போதுமானது எனவும் முன்னைய போகத்தில் 30,000 ஏக்கர் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் எடுத்துக்கொண்டால் ஈவு ஆனது 15:1 ஆக அமையப்பெறும் அதாவது காலபோகத்தில் 15 ஏக்கர் நெற் செய்கையை மேற்கொண்ட விவசாயி ஒருவர் இம்முறை சிறுபோக செய்கைக்கு 1 ஏக்கர் பெற்றுக்கொள்ள முடியும்.

| ஆண்டு | புலவுகளின் எண்ணிக்கை | விஸ்தீரணம் (ஏக்கர்) |
|---|---|---|
| 2016 | 68 | 3250 |
| 2017 | 29 | 250 |
| 2018 | 20 | 1260 |
| 2019 | 29 | 1710 |
| 2020 | 33 | 1850 |




மேலுள்ள அட்டவணை மன்னார் மாவட்டத்தின் புலவு செய்கையின் பொதுவான போக்கை எடுத்தியம்புகிறது.அதனடிப்படையில் 2017 ஆம் ஆண்டு மிக குறைவான புலவு செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. மிககுறைவான மழை வீழ்ச்சியே அதற்கான காரணமாக உள்ளது. எனினும் அதனைத் தொடர்ந்து புலவு செய்கை அதிகரித்து செல்கின்றது. ஆயினும் புலவுகள் அதிகரிப்பானது பல்வேறு சுழல் பிரச்சினைகளை உருவாக்குகின்றது. இப்புலவு செய்கையின் சாதகபாதக நிலைமைகள் தொடர்பாகவும் அவதானம் செலுத்துதல் அவசியமாகின்றது.

### புலவு செய்கையின் சாதக பாதக நிலைகள்

புலவு முறையில் நெற்செய்கையை மேற்கொள்ளுவதன் மூலம் உற்பத்தி அதிகரித்தல் மற்றும் விவசாயிகளுக்கு வருமானம் அதிகரிப்பதோடு மேலும் பல சாதக பாதக நிலைகள் காணப்படுகிறது.

அவையாவன –

* களைகளை கட்டுப்படுத்தல் – புலவு நிலங்களில் காணப்படும் களைகள் விவசாய நடவடிக்கையின் போது அகற்றப்படுகின்றது.
* மட்டுப்படுத்தப்பட்ட நீர் பாவனை – குறிக்கப்பட்ட காணிக்கு மட்டும் நீர் விநியோககப்படுவதால் அடாத்து செய்கையளவு மட்டுப்படுத்தப்படுகின்றது
* வயல் நிலங்களின் மண் வளம் மேம்படுத்தப்படும் – சிறுபோகத்தில் வயல் நிலங்களில் மறு வயிர் பயிர்செய்கையை மேற்கொள்ளுதல் அல்லது ஓய்வளித்தல் மூலம் வயல் நிலங்களின் மண் வளம் மேம்படுத்தப்படுகின்றது.

### புலவு செய்கையின் பாதகமான நிலைகள்

விவசாய திணைக்களத்தின் தொழில்நுட்ப ஆலோசனைகளையும் சிபார்சுகளையும் நடைமுறைப்படுத்த முடியாமை – உழுவுக்கு முன்னான சர்வ களை நாசினி பாவிக்க முடியாமை.

பசளை பாவனையின் போது நீர் மட்டம் சீராக பேணப்பட முடியாத நிலை காணப்படுகின்றது.

களை நாசினி பாவனையின் போது நீரை முற்றாக அகற்ற முடியாது இவற்றால் களைகனை முற்றாக கட்டுப்படுத்த முடியதா நிலை காணப்படுகின்றது.



வேலியடைக்கப்பட்ட புலவு செய்கை

அடி உர பாவனை மிக குறைந்தளவிலேயே காணப்படுகின்றது. இயந்திர முறை மூலமான நாற்று நடுகை மற்றும் களைகளை கட்டுப்படுத்தும் இயந்திரங்களை வினைத்திறனாக பயன்படுத்த முடியாமை விதை நெல்லினை உற்பத்தி செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது – பன்றி நெல்லின் கலப்பு அதிகமாக காணப்படும்.

சிறியளவில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் ஆர்வமுள்ள விவசாயிகளுக்கு சிறுபோக செய்கைக்கு சந்தர்ப்பம் கிடைக்காமை.

அதிகரித்த உற்பத்தி செலவு – வேலி அடைத்து பயிர் செய்ய வேண்டிய கட்டாய நிலை காணப்படுகின்றது.

புலவு செய்கைக்கான காணிகளை பிரித்து வழங்குவதில் விவசாயிகளிடத்தில் பிரச்சினைகள் ஏற்படுதல் – காலபோகத்தில் பெருவாரியாக நெற்செய்கை மேற்கொள்ளாத விவசாயிகளுக்கு ஈவு கிடைக்காத சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.

மேலும் புலவுகளை பகிர்ந்தளிப்பதில் மோசடிகள் ஏற்பட வாய்ப்புக்கள் காணப்படுகிறன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிக்கு நேற்று முதல் வெற்றி கிடைத்தது!



ஐ.பி.எல். 2021 தொடரில் பஞ்சாப் கிங்ஸ் அணியை 9 விக்கெட்டுக்களால் வீழ்த்தி, தனது முதலாவது வெற்றியை சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி பதிவு செய்துள்ளது.

நேற்று நடைபெற்ற இரு போட்டிகளில் முதலாவதில், சன்ரைசர்ஸ் ஹைதராபாத், பஞ்சாப் கிங்ஸ் அணிகள் சென்னையில் ஒன்றையொன்று எதிர்கொண்டிருந்தன.

இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பஞ்சாப் அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்து களமிறங்கி, 19.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 120 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. மயங்க் அகர்வால், ஷாருக்கான் இவரும் தலா 22ஓட்டங்களைச்சேர்த்தனர். சன்ரைசர்ஸ் அணியின் கலீல் அஹமட் 3, அபிஷேக் சர்மா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

121 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய சன்ரைசர்ஸ் அணி 18.4 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கைஅடைந்தது. ஜொனிபெயர்ஸ்டோ 63 ஓட்டங்களையும் டேவிட் வோர்னர் 37 ஓட்டங்களையும் எடுத்தனர். பஞ்சாப் அணியின் பஃபியன் அலென் வீழ்த்தப்பட்ட ஒரேயொரு விக்கெட்டைக் கைப்பற்றியிருந்தார். இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாக ஜொனி பெயர்ஸ்டோ தெரிவுசெய்யப்பட்டார்.

# சிம்பாப்வேயை வீழ்த்தியது பாகிஸ்தான்



ஆபிரிக்கக் கண்டத்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு கிரிக்கெட் தொடர்களில் விளையாடி வரும் பாகிஸ்தான் அணி, தென்னாபிரிக்க அணியுடனான தொடரை வெற்றிகரமாக நிறைவு செய்தது.

இப்போது, சிம்பாப்வே அணியுடனான 3 ரி20 போட்டிகள், 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது.

ரி20 தொடரின் முதலாவது போட்டி நேற்று ஹராரேயில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் ஸிம்பாப்வே முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது.

துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட பாகிஸ்தான் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரும் விக்கெட் காப்பாளருமான மொஹமட் ரிஸ்வான் ஆட்டமிழக்காமல் 82 ஓட்டங்களைப் பெற்றார். இவரைத் தவிர 15 ஓட்டங்களை எடுத்த டனிஸ் அஸிஸ், 13 ஓட்டங்களைப் பெற்ற பஃகர் ஸமான் இருவர் மட்டுமே இரட்டை இலக்க ஓட்டங்களைப் பெற பாகிஸ்தான் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 149 ஓட்டங்களைப் பெற்றது.

சிம்பாப்வேயின் லூக் ஜொங்வே, மதெவெரே ஆகிய இருவரும் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தனர்.

150 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பாட்டத்தை ஆரம்பித்த சிம்பாப்வே அணியால் 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து138 ஓட்டங்களையே பெறமுடிந்தது. க்ரெய்க் எர்வின் 34, லூக் ஜொங்வே 30 ஓட்டங்களைப் பெற்றனர்.

11 ஓட்டங்களால் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்ற இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாக மொஹமட் ரிஸ்வான் தெரிவானார். இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது ரி20 போட்டி நாளை நடைபெறவுள்ளது.

# பிரெஞ்ச் ஓபினில் விளையாடுவது உறுதி ரோஜர் பெடரர் டுவிட்டரில் பதிவு



20 கிராண்ட்ஸ்லாம் வென்ற சாதனையாளரான முன்னாள் நம்பர் ஒன் வீரர் ரோஜர் பெடரர் (சுவிட்ஸர்லாந்து) இந்த ஆண்டுக்கான பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டியில் விளையாடுவதை உறுதி செய்துள்ளார்.

20 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்ற சாதனையாளரான சுவிட்ஸர்லாந்தின் ரோஜர் பெடரர் இந்த ஆண்டுக்கான பிரெஞ்ச் ஓபின் டென்னிஸ் போட்டித் தொடரில் விளையாடுவதை உறுதி செய்துள்ளார்.

முழங்காலில் ஏற்பட்ட காயத்தால் கடந்த ஆண்டு பிரெஞ்ச் ஓபினை தவிர்த்திட வேண்டிய நிலைக்குள்ளான 39 வயதான பெடரர் மீண்டும் களம் திரும்புவதாக தனது டுவிட்டரில் கூறியுள்ளார்.

பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் தொடர் அடுத்த மாதம் 30 ஆம் திகதி நிறைந்த கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் பாரிஸில் ஆரம்பமாகவுள்ளது.



# ஐ.பி.எல். 2021 சென்னை அணிக்கு 3ஆவது வெற்றி!

ஐ.பி.எல். 2021 தொடரின் 15ஆவதும் நேற்று நடைபெற்ற இரு போட்டிகளில் இரண்டாவதுமான லீக் ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 18 ஓட்டங்களால் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை வென்றுள்ளது.

மும்பை மைதானத்தில் நேற்று இரவு நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட சென்னை அணி, 20 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 220 ஓட்டங்களைச் சேர்த்தது. டு பிளெஸிஸ் 95 ஓட்டங்களையும் ருத்ராஜ் கெய்க்வாட் 64 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியின் வருண் சக்கரவர்த்தி, சுனில் நரைன் மற்றும் ரஸல் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டினை வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 221 என்ற வெற்றி இலக்கை நோக்கிக் களமிறங்கிய கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி, 19.1 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 202 ஓட்டங்களைப் பெற்று 18 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பட் கம்மின்ஸ் ஆட்டமிழக்காது 66 ஓட்டங்களையும் அன்ட்ரே ரஸல் 54 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஆரம்பத்தில் மிகவும் தடுமாறிய கொல்கத்தா அணி ரஸல், கம்மின்ஸ் ஆகியோர் துடுப்பெடுத்தாடியபோது வேகமெடுத்து வெற்றி இலக்கை நெருங்கியபோதிலும் சென்னை அணியின் மிகப்பெரிய இலக்கை எட்டிப்பிடித்திட இயலவில்லை.

சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் தீபக் சஹார் 4, லுங்கி இங்கிடி 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக 60 பந்துகளில் ஆட்டமிழக்காது 95 ஓட்டங்களைக் குவித்த டு பிளெஸிஸ் தெரிவானார்.

# ஐ.பி.எல்.2021 – இன்றைய போட்டியில் பெங்களூர் – ராஜஸ்தான் அணிகள் மோதல்!

ஐ.பி.எல்.2021தொடரின் இன்றைய போட்டியில் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர், ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிகள் ஒன்றையொன்று எதிர்கொள்கின்றன.

மும்பையில் நடைபெறவிருக்கும் இந்தப் போட்டி, இலங்கை நேரப்படி இரவு 7.30க்கு ஆரம்பமாகும்.

நேற்று நடைபெற்ற போட்டியில் தனது தொடர்ச்சியான 3 ஆவது வெற்றியைப் பெற்றுக்கொண்ட சென்னை சூப்பர் கிங்ஸ் அணி, புள்ளிப்பட்டியலில் முதலிடத்துக்கு முன்னேறியது. முதலிடத்திலிருந்து வந்த ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர், இரண்டாமிடத்துக்குக் கீழிறங்கியது. இன்று பெங்களூர் அணி வெற்றி பெற்றால் மீண்டும் முதலிடத்தைப் பெற்றுக்கொள்ளும். ராஜஸ்தான் அணிக்கு வெற்றி கிடைக்குமானால் அது ஏழாமிடத்திலிருந்து ஐந்தாமிடத்துக்கு முன்னேறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈஸ்டர் தாக்குதலைப் போன்றதொரு தாக்குதல் இனி நாட்டில் நடக்காது

## ஜனாதிபதி உறுதியளித்தார் என்கிறார் பஸில்



கொழும்பு, ஏப்.22

ஈஸ்டர் குண்டுத் தாக்குதலைப் போன்ற மற்றொரு தாக்குதல் நாட்டில் நடக்காது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார் என பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய அக்கட்சியின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ, 2019 ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பாக விசாரணை செய்பவர்கள் அதற்கான பதில்களை வழங்குவார்கள் எனக் கூறினார்.

இதேவேளை, சம்பந்தப்பட்ட விசாரணைகளில் காணப்படும் முன்னேற்றம் தொடர்பாக அரசாங்கம் கூட முழுமையாகத் திருப்தி அடையவில்லை என்றும் பஸில் ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

தற்போதைய சூழ்நிலையில் மே தினப் பேரணிகளை நடத்தாது, சுகாதார வழிகாட்டுதல்களைக் கடைப்பிடித்து கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

# மற்றொரு தாக்குதல்; அச்சம் தொடர்கிறது

## எச்சரிக்கின்றார் ஓமல்பே சோபித தேரர்

நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதே எந்தவோர் அரசாங்கத்தினதும் பிரதான பொறுப்பாகும். எனினும் கடந்த அரசாங்கமும் அந்தப் பொறுப்பை நிறைவேற்றத்தவறியுள்ளதோடு, தற்போதைய அரசாங்கமும் இந்த விடயத்தில் உரிய அவதானம் செலுத்தவில்லை என்று ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

2019 ஏப்ரல் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டவர்களுடன் இணைந்து பயிற்சி பெற்ற பலர் இன்றும் நாட்டில் நடமாடிக் கொண்டிருக்கின்றனர்.

எனவே எந்தச் சந்தர்ப்பத்திலும் ஏதேனுமொரு மத வழிபாட்டு ஸ்தலத்தில் இது போன்றதொரு தாக்குதல் மேற்கொள்ளப்படலாம் என்ற சந்தேகம் அனைவர் மத்தியிலும் காணப்படுகிறது.

இந்த சந்தேகத்தைப் போக்க வேண்டியதும் தற்போதைய அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்றும் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு இரண்டு ஆண்டுகள் நிறைவடைந்துள்ளமையை முன்னிட்டு நேற்று புதன்கிழமை கொழும்பு – கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தில் இடம்பெற்ற விசேடஆராதனையில்கலந்துகொண்டுஉரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில் –


உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களால் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கு சோகத்தை தெரிவிப்பதற்காக மாத்திரம் இந்த ஈராண்டு பூர்த்தி அனுஷ்டிக்கப்படவில்லை. மாறாக மீண்டும் இவ்வாறானதொரு தாக்குதல் இடம்பெற வாய்ப்பளித்து விடக் கூடாது என்பதையும் இன்றைய தினத்தில் வலியுறுத்துகின்றோம்.

நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதே அரசாங்கத்தின் பிரதான பொறுப்பாகும். எனினும் கடந்த அரசாங்கத்தால் அந்தப் பொறுப்பு நிறைவேற்றப்படவில்லை.

அதே போன்று தற்போதைய அரசாங்கத்தாலும் இது தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படவில்லை என்று பரவலாகக் குற்றஞ்சுமத்தப்படுகிறது.

எனவே, கடந்த அரசாங்கத்தால் ஏற்பட்ட நெருக்கடி நிலைமைகளை நிவர்த்தி செய்வதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் தற்போதைய அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்.

அதற்கமைய தீவிரவாதத்தை மாத்திரமன்றி அதற்கு ஏதுவாக அமைகின்ற காரணிகளும் இல்லாமலாக்கப்பட வேண்டும். அன்றைய தினம் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை முன்னெடுத்தவர்களுடன் தீவிரவாத பயிற்சி பெற்ற பலர் இன்றும் சமூகத்தில் சுதந்திரமாக நடமாடிக் கொண்டிருக்கின்றனர்.




அவ்வாறானவர்கள் தமது கொள்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கத்தோலிக்க ஆலயங்களில் மாத்திரமன்றி வேறு எந்தவொரு மத வழிபாட்டு ஸ்தலங்களிலும் தாக்குதல்களை மேற்கொள்ளக் கூடும் என்ற சந்தேகம் அனைவர் மத்தியிலும் காணப்படுகிறது. அந்த சந்தேகத்தை போக்க வேண்டியது தற்போதைய அரசாங்கத்தின் கடமையாகும்.

தீவிரவாதத்தின் ஒரு ரூபத்தை மாத்திரமே நாம் 2019 உயிர்த்த ஞாயிறு தினத்தன்று பார்த்தோம். எனினும் அதன் ஏனைய ரூபங்களை அண்மையில் விஷத்தன்மை மிக்க உணவிலும் , கடந்த செவ்வாய்க் கிழமைநாடாளுமன்றஉரையொன்றிலும்அவதானிக்க முடிந்தது.

எஸ்.எல்.எஸ். தரச்சான்றின் மீதும் நம்பிக்கை அற்றுப் போயுள்ளது. மக்களைச் சீரழிக்கின்ற இது போன்ற அனைத்து விடயங்களும் தீவிரவாதமேயாகும். இவை அனைத்தையும் இல்லாதொழிக்கக் கூடிய பாரிய பொறுப்பு அரசாங்கத்துக்குரியதாகும். இதற்காக எடுக்கப்படும் சகல நடவடிக்கைகளுக்கும் நாம் முழுமையான ஒத்துழைப்பை வழங்கத் தயாராகவுள்ளோம்.

கடந்த காலங்களில் தலதா மாளிகை தாக்குதல் , அரந்தலாவை பிக்குகள் படுகொலை உள்ளிட்ட சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்கள் என்ற ரீதியில், தற்போது கத்தோலிக்க மக்கள் அனுபவிக்கின்ற வலியை எம்மாலும் உணர முடிகிறது.

எனவே, பாதிக்கப்பட்ட மக்கள் விரைவில் அதிலிருந்து மீளப் பிரார்த்திக்கின்றோம். இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்காக 2019 ஜுலை 30 ஆம் திகதி சர்வதேச முஸ்லிம் அமைப்பால் இலங்கை அரசாங்கத்திற்கு 100 கோடி ரூபா நிதியுதவி வழங்கப்பட்டது. இந்த நிதிபாதிக்கப்பட்டமக்களின்நலனுக்காகப்பயன்படுத்தப் பட்டதா ?

இது தொடர்பில் சரியான தகவல்கள் இல்லை என்பதால் இன்றைய தினம் புலனாய்வுப்பிரிவு மற்றும் அரசாங்கத்திடம் இந்த நிதிக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்துமாறு கோரிக்கை விடுக்கின்றோம்.– என்றார்.

# ஒக்ஸ்போர்ட் - அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசி இலங்கையில் இடைநிறுத்தப்படவில்லை

## சுகாதார அமைச்சர் நாடாளுமன்றில் தெரிவிப்பு

இலங்கையில் ஒக்ஸ்போர்ட் – அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசிப் பயன்பாடு இடைநிறுத்தப்படவில்லை என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியராச்சி தெரிவித்துள்ளார்.

நேற்று (புதன்கிழமை) நாடாளுமன்றில் உரையாற்றிய அவர், மே முதல் வாரத்திலிருந்து இரண்டாவது டோஸ் தடுப்பூசியை வழங்கத் திட்டமிட்டுள்ளதாகவும் கூறினார்.




அஸ்ட்ராஜெனெகா கொவ்ஷீல்ட் தடுப்பூசி பயன்பாடு இடைநிறுத்தப்பட்டுள்ளதா என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

தடுப்பூசித் திட்டத்தின் போது ஏற்படும் அரிய ஒவ்வாமை நிலைமைகள் தொடர்பாகத்தேவையற்ற பிரசாரம் தடுப்பூசி திட்டத்துக்கு இடையூறாக அமையலாம் என்றும் சுகாதார அமைச்சர் கூறினார்.

சுகாதார அமைச்சால் வழங்கப்பட்ட தடுப்பூசியை பொதுமக்கள் நம்பிக்கையுடன் பெற்றுக்கொள்கின்றனர் ஆனால் இது தொடர்பாகத் தேவையற்ற பிரசாரம் பொதுமக்கள் நம்பிக்கை இழக்க காரணமாக அமையும் என்றும் சுட்டிக்காட்டினார்.

அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசி மட்டுமல்ல, வேறு எந்தத் தடுப்பூசியாலும் சிக்கல்கள் ஏற்படக்கூடும் என குறிப்பிட்ட அமைச்சர் பவித்ரா வன்னியராச்சி, தற்போது பயன்பாட்டில் உள்ள பெரும்பாலான தடுப்பூசிகளை பெற்றுக்கொண்ட ஒரு லட்சம் பேரில் ஒருவருக்கு ஒவ்வாமை ஏற்படலாம் என்றும் கூறினார்.

# துப்பாக்கி உட்பட வெடிமருந்துடன் யாழ். வடமராட்சியில் மூவர் கைது



யாழ். வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்நாட்டு தயாரிப்பிலான துப்பாக்கியும் அவற்றுக்குப் பயன்படுத்தப்படும் வெடிபொருள்கள் மற்றும் பன்றி இறைச்சி என்பவற்றுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுண்டிக்குளம் காட்டுப் பகுதியில் மூவர் வேட்டையில் ஈடுபடுகின்றனர் எனக் கடற்படையினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போதே இந்த மூவரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து மீட்கப்பட்ட துப்பாக்கி, வெடிபொருள்கள் மற்றும் இறைச்சி என்பவற்றை கடற்படையினர் மருதங்கேணி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். விசாரணையின் பின்னர் அவர்களையும் அவர்களிடமிருந்து மீட்கப்பட்ட பொருள்களையும் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# 7 ஆயிரத்து 110 கிலோ மஞ்சள் மீட்கப்பட்டது



சட்டவிரோதமாக நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்ட உலர்ந்த மஞ்சள் அடங்கிய ஒரு கொள்கலனை இலங்கை சுங்கப் பிரிவினர் பறிமுதல் செய்துள்ளனர்.

பறிமுதல் செய்யப்பட்ட உலர்ந்த மஞ்சளின் மொத்த எடை 7 ஆயிரத்து 110 கிலோ கிராம் என சுங்கப் பிரிவு அதிகாரிகள் மதிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை மேலும் மூன்று சந்தேகத்திற்கிடமான கொள்கலன் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.04.2021 இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org